அன்னையரின் கால் நடந்த பூமி
எங்கள் தங்கையர் கை வேல் எறிந்த பூமி
இளம் கன்னியரின் காதல் மொழி கேட்டிருந்த பூமி
இன்று அன்னியரின் கால் அணியா அழிவதுவோ நீதி

ஆயிரமாயிரம் ஆண்டுகளின் இன்று நம் தேசத்தில் விடுதலை தீ 2
நம் மாபெரும் தலைவனின் ஆணையினால் பகை வீடுகள் முழுவதும் தீ
மெல்லியராம் எங்கள் தங்கையர் நெஞ்சிலும் மூள்கியே வளருது தீ
பகை வெல்லுவோம் அதுவரை கண்ணுறங்கோம்
இனி தம்பியர் மூச்சிலும் தீ

கண்ணீரும் சென்னீரும் மெய்யாய் சொரிந்து
நாம் வளர்த்த விடுதலை தீ
சில புல்லியரின் போக்கினினால் புதைந்ததேதானதம்மா
அன்னியரின் ஆதிக்கம் அடிமைகளின் சதிராட்டம்
அரிசிக்கும் பருப்பிற்கும் அன்னை பூமி அடமானம்

அடிக்குமேல் அடி விழுந்தால் ஜம்பத்துஎட்டின் அடி மறந்திடுமோ தமிழா
புலம்பெயர்ந்து வாழ்ந்தால் புலிகளின் தேசம் நெஞ்சில் மறைந்திடுமோ தமிழா
உயிர்கொடுத்தான் இருக்க உணவு தந்தான் காலை கழுவுவதேன் தமிழா
புலிக்குப்பிறந்தாய் என்று பூனையாய் வாழ்வதென்ன பொங்கி எழுவாய் தமிழா

எங்கள் குரல்வளை நெரித்தவர் வீட்டினில் இடிஎன கேட்டது வெடியோசை
அன்னை துகில் முனை தொட்டவன் நெஞ்கினை கிழித்தது புலிகளின்குரலோசை
தட தட வென பகைவர்கள் வந்தனர் காணவில்லை அவர் எங்கே
கரம்புலி அதிர்ந்தது காற்றினில் கலந்தது எதிரியின் கலியுகம் எங்கே
ஆயிரம் அதிசையம் நிகழ்த்திக்காட்ட அண்ணன் தலைமை நமக்குண்டு
வீரம் நிறைந்த வேங்கையர் உண்டு வெற்றியும் நிச்சயம் நமக்குண்டு
ஆயினும் பணபலம்வேண்டும் அதை அள்ளித்தர நீ வரவேண்டும்
இருக்கையை விட்டு எழுந்து வா ஒரு சதமேனும் உவந்து தா
இடுவோம் நீரை வேருக்கு தமிழீழம் மலரும் நாளைக்கு